**கவனிக்க.-** *06.05.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1706 - 2011 මැයි මස 13 වැනි සිකුරාදා - 2011.05.13

*1706 ஆம் இலக்கம் – 2011 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 582 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 588 |


**கவனிக்க.-** (i) *த. மு. தசநாயக்க சமூக சேவைகளும் அறக்கட்டளை தர்மஸ்தாபனமும் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 08 ஏப்பிறல், 2011 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குரிய குறைநிரப்பியாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

(ii) *நொத்தாரிசுகள் (திருத்தம்) சட்டமூலம் 21 ஏப்பிறல், 2011 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குரிய குறைநிரப்பியாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2011, மே மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, மே மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிருபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## சுற்றாடல் அமைச்சு

வனத் திணைக்களம்

### விரிவாக்கல் அதிகாரி பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2011

வனத் திணைக்களத்தில் விரிவாக்கல் அதிகாரி பதவிக்கு வேண்டப்படும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

*2.* **சம்பள விகிதம்.**- (1) எம்என் : 1-2006ஏ பொது நிருவாக சேவை சுற்றறிக்கை 01/2006 (iv) பிரகாரம்- ரூபா 13,120-145-11 x 170-10 x 240-10 x 320-ரூபா 22,040

3. **பணிக்கமர்த்தும் நியதிகள் மற்றும் சேவை நிபந்தனைகள்.**- (அ) இந்நியமனம் நிரந்தரமானது. விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவித் தொகை வழங்குதல் வேண்டும்.

(ஆ) இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்தினைக் கொண்டதாகும்.

(இ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வனத் திணைக் களத்தினால் பிராந்திய, மாவட்ட மற்றும் கிராமிய மட்டத்தில் நடாத்தப்படும் பல்வகையான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல்களை பொதுமக்களின் பங்கேற்புடன் வெற்றிகரமாகவும் வினைத்திறனுடனும் கண்காணித்து ஒருங்கிணைக்க வேண்டும்.

(ஈ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் எந்தவொரு இடத்திலும் அல்லது பகுதியிலும் பணிபுரிவதற்கு தயார் நிலையில் இருக்க வேண்டும். அவைகளில் சில நாட்டின் பின்தங்கிய பிரதேசங்களில் அமைந்துள்ளன.

(உ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை பகுதி I : தொகுதி (IIஅ)வில் தொடக்கத்தில் பிரசுரிக்கப் பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங் களுக்குப் பொருந்தக்கூடிய பொது நிபந்தனைகளுக்கும் ஏற்புடையதாக அமையும்.

(ஊ) சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் பரீட்சை நடாத்தப்படும்.

4. **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க மற்றும் மாகாண சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதின் மேலெல்லை ஏற்புடையதாகாது.

5. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்.**- எல்லா விண்ணப்பதாரி களும் கீழே தரப்பட்டுள்ள தகைமைகளை திருப்திகரமாக நிரூபிக்க வேண்டும் :-

(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) நல்லொழுக்கம் உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்.

*6.* **ஆட்சேர்க்கும் முறை.**- (அ) பந்தி 5 இன் பிரகாரம் தகைமைகளைப் பூர்த்திசெய்பவர்களுக்கும் எழுத்துப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களுக்கும் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையொன்றின் பின்னர் தேர்வு மேற்கொள்ளப்படும். (நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டா.)

(ஆ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், இலங்கை வனவியல் கல்லூரியில் மூன்று மாத கால செய்முறைசார் பயிற்சித் திட்டத்தில் எழுத்து மற்றும் செய்முறைசார் பரீட்சைகளில் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னரான மூன்று வருட காலத்திற்குள் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(இ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் ஒரு வருட காலத்திற் குள் இனங்காணும் பரீட்சையைப் பூர்த்திசெய்தல் வேண்டுமென்பதுடன் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னரான ஏழு வருட காலத்திற்குள் இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையாக வனச்சட்ட பரீட்சையைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

7. **எழுத்துப் பரீட்சை.**- இரண்டு வினாத்தாள்களைக் கொண்டி ருக்கும்.-

(அ) நுண்ணறிவுப் பரீட்சை (உளச்சார்பு) - (ஒரு (1) மணித்தியா லம்) - 100 புள்ளிகள்

விண்ணப்பதாரியின் எண்ணிலான ஆற்றல், தர்க்க ஆற்றல், பகுப்பாய்வு தகுதி மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல் போன்றவைகளை மதிப்பீடு செய்யும் வண்ணம் இந்த வினாத்தாள் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் பல்லின தேர்வு வினாக்கள் மற்றும் சிறு விடை வினாக்களையும் கொண்டி ருக்கும்.

(ஆ) பொது அறிவுப் பரீட்சை - (இரண்டு (2) மணித்தியாலம்) - 100 புள்ளிகள்

வனப் பாதுகாப்பு மற்றும் தொடர்பாடல் விடயங்களில் விண்ணப்பதாரியின் அறிவினைப் பரீட்சித்துப் பார்ப்ப தற்கான வினாத்தாளாக இது அமையும்.

*8.* **விண்ணப்பிக்கும் முறையும் ஏனைய தகவல்களும்.**- (அ) இந்த அறிவித்தலின் இறுதியில் வழங்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் படிவம் 21 x 29 செ. மீ. (ஏ4) கடதாசியைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டு 2011.06.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் ''பரீட்சை ஆணையாளர் நாயகம், அமைப்பு முறை மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'' என்னும் முகவரிக்குப் பதிவுத்தபாலின் மூலம் அனுப்பப்பட வேண்டும். (ஏதேனும் பிரத்தியேக விலாசத்திற்கு அல்லது வேறு விலாசத்திற்கு விண்ணப் பங்கள் அனுப்பப்படலாகாது) அனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் 'வன விரிவாக்கல் அதிகாரி பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2011' எனக் குறிப்பிடல் வேண்டும்.

(ஆ) பூரணப்படுத்தப்படாத அல்லது தாமதமாகப் பெறப்படும் விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

(இ) தபாலில் இல்லாமல் போகும் விண்ணப்பங்களுக்கு பொறுப்புக் கூறப்படாது.

(ஈ) விண்ணப்பதாரிகளின் கையொப்பம் பின்வரும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அரசாங்கப் பாடசாலை

யொன்றின் அதிபர், சமாதான நீதவான், தரைப்படை, கடற்படை, விமானப்படை அல்லது காவல்துறையைச் சேர்ந்த அதிகாரம் கொண்ட அதிகாரி அல்லது தேசிய அல்லது மாகாண சபையின் நிரந்தர மேலதிகாரி அல்லது விண்ணப்பதாரர் வசிக்கும் இடத்தில் கிராம சேவையாளர் பிரிவின் கிராம சேவையாளர் ஆகியோர்.

(ஊ) இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு அனுகூலமாகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஊ) தேசிய அல்லது மாகாண சபை அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவங்களைத் தத்தமது திணைக்களத் தலைவர்கள் மூலமாக அனுப்பிவைத்தல் வேண்டு மென்பதுடன் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்படின் அவரை விடுவிக்க சம்மதிக்கிறேன் என்ற தலைவரின் உறுதிமொழியும் அவசியமாகும்.

(எ) விண்ணப்பங்கள் கிடைத்தது என்று அறிவிக்கப்பட மாட்டாது.

9. **பரீட்சைக் கட்டணங்கள்**.- (1) பரீட்சைக் கட்டணம் ரூபா 300. இத்தொகை அண்மையில் உள்ள பிரதேச செயலகத்தில் செலுத்தப்பட்டு வன பாதுகாவலர் நாயகத்தின் பொது வைப்பில் முதலீடு செய்யப்படல் வேண்டும். விண்ணப்பத்தில் காட்டப்பட்டுள்ள இடத்தில் பற்றுச்சீட்டு ஒட்டப்படல் வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியொன்றை விண்ணப்ப தாரர் வைத்திருக்கவும் அறிவுறுத்தப்படுகிறது.)

(2) பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படாது. அத்துடன் வேறேதேனும் பரீட்சைக்கு அது கட்டணமாக மாற்றப்பட மாட்டாது.

10. விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களில் எல்லா வற்றையும் அல்லது ஏதேனும் ஒரு ஆவணத்தை எந்நேரத்திலும் தேவைப்படும்போது சமர்ப்பிக்க வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) கல்வித் தராதரச் சான்றிதழ் ;

(இ) பிரதேச செயலாளரினால் உறுதிசெய்யப்பட்ட கிராம சேவை யாளரிடமிருந்து அண்மையில் பெறப்பட்ட சான்றிதழ் ;

(ஈ) இரண்டு ஒழுக்கச் சான்றிதழ்கள் ;

(உ) வேறு ஏதேனும் சான்றிதழ்கள்.

**தயவுசெய்து கவனிக்கவும்**.- ஆவணங்கள் அல்லது ஆவணங்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படலாகாது.

11. (அ) **பரீட்சை பின்வரும் நகரங்களில் நடாத்தப்படும்** :-

(1) கொழும்பு
(2) கம்பஹா
(3) களுத்துறை
(4) கண்டி
(5) மாத்தளை
(6) நுவரெலியா
(7) மாத்தறை
(8) காலி
(9) அம்பாந்தோட்டை
(10) இரத்தினபுரி
(11) கேகாலை
(12) குருநாகல்
(13) புத்தளம்
(14) பதுளை
(15) மொனராகலை
(16) அநுராதபுரம்
(17) பொலன்னறுவை
(18) அம்பாறை
(19) திருகோணமலை
(20) மட்டக்களப்பு
(21) வவுனியா
(22) கிளிநொச்சி
(23) முல்லைத்தீவு
(24) யாழ்ப்பாணம்

(ஆ) மேற்கூறப்பட்ட நிலையங்களில் எவற்றுக்கேனும் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாதவிடத்து விண்ணப்பதாரர்கள் அருகாமையிலுள்ள நிலையங்களுக்கு அனுப்பப்படுவர்.

(இ) பரீட்சைத் தினத்திற்கு ஏழு நாட்களுக்கு முன்னதாக பரீட்சை நடாத்தப்படும் இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றை குறிப்பிட்டு நுழைவுக் கடிதம் அனுப்பப்படும். பிரயாணச் செலவுகள் அல்லது வேறேதேனும் செலவுகள் இந்நோக்கத்திற்காக விண்ணப்பதாரர் களுக்கு வழங்கப்படமாட்டாது. நுழைவுக் கடிதம் அனுப்புவது பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டதாக கருதப்படக்கூடாது.

12. **விண்ணப்பதாரரின் அடையாளம்**.- விண்ணப்பதாரர்கள் தங்களது அடையாளத்தை பரீட்சையாளர்களிடம் திருப்திகரமாக நிரூபிக்க வேண்டும். பின்வருவனவற்றில் ஏதேனும் ஆவணங்கள் இவ்விடயத்திற்காக ஏற்றுக்கொள்ளப்படும் :-

(1) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
(2) செல்லுபடியான கடவுச்சீட்டு ;
(3) செல்லுபடியான வாகன ஓட்டுதல் சான்றிதழ்.

13. தவறான தகவல் வழங்குவதற்கான தண்டனைகள்.- விண்ணப்ப தாரர் தகைமை கொண்டவரல்லர் எனக் காணப்பட்டால் அவரது விண்ணப்பம் எந்நேரத்திலும் இரத்துச்செய்யப்படும். அவரது அறிவுக்கு ஏற்ப விண்ணப்பதாரரினால் வழங்கப்படும் விபரங்கள் ஏதேனும் பிழையானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது அவர் முக்கியமான விபரத்தை வேண்டுமென்று மாற்றியிருந்தால் அவரது தெரிவுக்குப் பின் அரசாங்க சேவையிலிருந்து அவர் நீக்கம் செய்யப்படப் படுவர்.

14. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத விபரங்கள் வன பாதுகாவல் நாயகத்தின் தீர்மானத்தின்படி மேற்கொள்ளப்படும்.

வன பாதுகாவலர் நாயகம்.

வனத் திணைக்களம்,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
28.04.2011.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வன திணைக்களம்**

வன திணைக்களத்தின் வன விரிவாக்கல் அதிகாரி பதவி - 2011

| |
|---|
| நகர இல. : |
| நகரம் :............................ |
| அறிவித்தலின் பந்தி II ஐப் பார்க்கவும். |

1. (i) முதல் எழுத்துக்களுடன் விண்ணப்பதாரரின் பெயர் (ஆங்கிலத்தில்) :———.
   (ii) முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) :———.

2. நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்) :———.

3. பால் :
   ஆண்-0, பெண்-1 ☐
   (தயவுசெய்து பெட்டிக்குள் தொடர்புடைய இலக்கத்தை எழுதவும்.)

4. விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழி :—
   சிங்களம்-சி, தமிழ்-த, ஆங்கிலம்-ஆ ☐
   (தயவுசெய்து பெட்டிக்குள் தொடர்புடைய எழுத்தை எழுதவும்.)

5. இலங்கைப் பிரஜையா ? :———.
   வம்சாவழியினால்-1, பதிவினால்-2 ☐
   (தயவுசெய்து பெட்டிக்குள் தொடர்புடைய இலக்கத்தை எழுதவும்.)

6. பிறந்த திகதி :———.

   2011.06.30 ஆந் திகதியன்று வயது :-

   வருடங்கள் :———. மாதங்கள் :———. நாட்கள் :———.

7. தேசிய ஆளடையாள அட்டை இல. :———.

8. கல்வித் தகைமைகள் :-

   (i) க. பொ. த. (சாதாரண தரம்) :

   1 ஆவது அமர்வு.-

   ஆண்டு :———. சுட்டிலக்கம் :———.

| பாடம் | தரம் |
|---|---|
| | |

   2 ஆவது அமர்வு.-

   ஆண்டு :———. சுட்டிலக்கம் :———.

| பாடம் | தரம் |
|---|---|
| | |

9. மேலதிக கல்வித் தகைமைகள் :———.

10. தொழில்துறை/ஏனைய தகைமைகள் :———.

11. (i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவின் பெயர் :———.

    (ii) பண பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :———.

| |
|---|
| கழற்றமுடியாதவண்ணம் பணப்பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும். |

12. (i) நீர் நீதிமன்றத்தால் ஏதேனும் குற்றத்திற்காக குற்றவாளியாகக் காணப்பட்டு தண்டிக்கப்பட்டவரா ? (ஆம்/இல்லை) :———.

    (ii) ஆம் எனில், விபரங்களைத் தரவும் :———.

13. நீர் ஏற்கனவே சேவையில் கடமையாற்றின் விபரங்களைத் தரவும் :

    பதவி :———. நிறுவனம் :———.

    முதல் நியமனத் திகதி :———. சம்பளம் :———.

14. உம்மைப் பற்றிய தனிப்பட்ட விபரங்களைத் தரக்கூடிய உமக்கு சொந்தமற்ற இருவரின் பெயர்களைத் தொலைபேசி எண்களுடன் குறிப்பிடவும் :

    (i) :———.
    (ii) :———.

15. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் உறுதிமொழிகிறேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என்று தெரிவு செய்யப்படுவதற்கு முன் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும் நியமனத்தின் பின் காணப்படின் எவ்வித நட்டஈடுமின்றி விலக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

———,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :———.

16. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

திரு./ திருமதி/ செல்வி .............................................. அவர்களை எனக்கு தெரியும் என்றும் 2011,...................... ஆந் திகதியன்று அவர் எனது முன்னிலையில் இவ்விண்ணப்பத்தில் தனது கையொப்பத்தை இட்டார் என்றும் நான் இத்தால் உறுதிப் படுத்துகின்றேன்.

———,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :———.
பதவி :———.
விலாசம் :———.
திகதி :———.

17. ***இப்பகுதி விண்ணப்பதாரர் தேசிய மற்றும் மாகாண சபை அரச ஊழியராக இருப்பின் திணைக்களத் தலைவரினால் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.***

விண்ணப்பதாரர் திரு./ திருமதி/ செல்வி ...................... .......................................... அமைச்சில்/ திணைக்களத்தில் ....................................................................................... பதவியினை வகிக்கும் நிரந்தர/ தற்காலிக ஊழியர் ஒருவர் எனவும் அவர் கொடுத்திருக்கும் விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் நான் உறுதிப்படுத்து கிறேன். விண்ணப்பதாரர் இப்பதவிக்கு அவர் தெரிவுசெய்யப் பட்டால் தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/ விடுவிக்க முடியாது.

———,
திணைக்கள தலைவரின்/ அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியின் கையொப்பம்.

பெயர் :———.
பதவி :———. (பதவி முத்திரை)
திகதி :———.

(தயவுசெய்து தேவையற்ற சொற்களை நீக்கிவிடவும்.)

**தயவுசெய்து கவனிக்கவும்.**- பரீட்சைக் கட்டணப் பற்றுச்சீட்டைத் தவிர்த்து வேறு ஆவணம் எதுவும் விண்ணப்பத்தில் இணைக்கப் படலாகாது.

5-166

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி – திருகோணமலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011, ஆனி மாதம் 14 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2011, சித்திரை மாதம் 19 ஆந் திகதி.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| திருகோணமலை | திருகோணமலை (பட்டினமும் சூழலும்) | சீனக்குடா பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், திருகோணமலை |

5-205

---

## அரசாங்க தகவல் திணைக்களம்

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நிலவுகின்ற கீழே குறிப்பிட்டுள்ள வெற்றிடங்களுக்கு ஏற்ற தகைமைகள் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.-

தொழில்நுட்ப உதவியாளர்
உதவி புகைப்படவியலாளர்

1. **விண்ணப்பப்பத்திரங்கள் அனுப்பவேண்டிய விதிமுறைகள் :**

1.1 கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கிணங்க விண்ணப்பப்படிவத்தை 'ஏ4' பேப்பரில் இரு பக்கங்களையும் உபயோகித்து, நிரப்பியபின் அதனை பதிவுத்தபாலில் "அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருளப்பனை வீதி, கொழும்பு 05" என்ற விலாசத்திற்கு 2011, யூன் 13 ஆந் திகதிக்கு முன் கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாக எழுத வேண்டும்.

1.2 விண்ணப்பப்படிவங்கள் இறுதித் திகதியின் பின் பாரமேற்கப்பட மாட்டா. விண்ணப்பப்படிவங்கள் தபாலில் தாமதம் ஏற்படும் சாத்தியம் உள்ளதால் அதனைத் தவிர்ப்பதற்கு முன்கூட்டியே விண்ணப்பித்தல் உகந்ததாகும்.

1.3 நியமனத்திற்கு முன்பு ஏதாவது உண்மைக்குப் புறம்பான தகவல்கள் கண்டுபிடிக்கப்படின் விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். நியமனத்திற்குப் பின்பு உண்மைக்குப் புறம்பான தகவல்கள் ஏதாவது கண்டுபிடிக்கப்படின் சேவையில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**கவனத்திற்கொள்க**.- விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்பட மாட்டாது. தகுந்த தகைமைகள் அற்ற விண்ணப்பப் படிவங்களும், முறையான விதத்தில் நிரப்பப்படாத விண்ணப்பப் படிவங்களும் நிராகரிக்கப்படும்.

2. **கல்வித் தகைமைகள்**.- க. பொ. த. (உயர் தரம்) விஞ்ஞானப் பாடத்திட்டத்தில் பௌதீகவியல்/இரசாயனவியல் உள்ளிட்ட மூன்று பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும். அத்துடன் க. பொ. த. (சாதாரண தரத்தில்) இரு தடவைக்கு மேற்படாத வகையில் மொழி அல்லது இலக்கியத்தில், கணிதத்தில், விஞ்ஞானத்தில் திறமைச் சித்தியும் வேறு ஒரு பாடத்திலும் எல்லாமாக 6 பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

3. **தொழிற்துறை தகைமைகள்**.- விண்ணப்பதாரி தான் விண்ணப்பிக்கின்ற பதவிக்கு ஏற்புடையதாக கீழே தரப்பட்டுள்ள தகைமைகளில் ஒன்றையாவது பெற்றிருத்தல் வேண்டும் :-

(1) மொறட்டுவ பல்கலைக்கழகத்தினாலோ அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினாலோ வழங்கப்பட்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

(2) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்றுவிக்கும் அதிகாரியினால் வழங்கப்பட்ட தேசிய பொறியியல் டிப்ளோமா

அல்லது

(3) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா

அல்லது

(4) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

(5) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் இயந்திர பொறியியல் பரீட்சையின் 1 ஆவது பகுதியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல்

அல்லது

(6) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேல் குறிப்பிடப்பட்ட தொழில் நுட்பச் சான்றிதழை வழங்கக்கூடிய நிறுவனங்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய மேற்குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களுக்கு சமமென இலங்கைத் தொழில்நுட்ப சபையால் அங்கீகரிக்கக்கூடிய மேற்குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களுக்கு சமமென இலங்கைத் தொழில்நுட்ப சபையால் அங்கீகரிக்கக் கூடிய வேறு தொழிநுட்பத் தகைமையைப் பெற்றிருத்தல்.

4. **வேறு தகைமைகள்**.- சிறந்த நல்லொழுக்கமும் நல்ல தேக ஆரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவு**.- அரச நிருவாக சுற்றுநிருப இல. 6/2006 (iv) அமைவாக ஒவ்வொரு பதவிக்குமான சம்பள அளவு பின்வருமாறு :-

தொழில்நுட்ப உதவியாளர்.- எம்என்-3-2006ஏ-ரூபா 15,005-4X180-6X240-11X320-20X360-ரூபா 27,885

உதவி புகைப்படக் கலைஞர்.- எம்ரி-3-2006ஏ-ரூபா 14,910-10X180-11X240-6X320-14X360-ரூபா 24,510

6. **வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(தற்போது அரச மற்றும் மாகாண சேவையில் பணியாற்றுபவர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

7. **சேர்த்துக்கொள்ளப்படும் முறை**.- தகைமையுடைய விண்ணப்பதாரிகள் போட்டிப் பரீட்சையொன்றுக்குத் தோற்றவைத்து, அந்தப் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் பொருத்தமானவர் தெரிந்தெடுக்கப்படுவர். நேர்முகப் பரீட்சை மூலம் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. அத்துடன் தகைமைகள் மட்டும் பரீட்சித்துப் பார்க்கப்படும். ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்கும் குறைந்தபட்சம் 40 புள்ளிகள் பெறப்பட வேண்டும். எழுத்துமூலப் பரீட்சைக்கான பாடங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.-

| வினாப் பத்திர இல. | விடயம் | காலம் | உள்ளடக்கப் பட்டுள்ள துறைகள் |
|---|---|---|---|
| 1 | விடயதானம் தொடர்பான அறிவு (தொழில் நுட்ப உதவி யாளர், புகைப் படப்பிடிப்பாளர் | 1 மணித்தியாலம் | இரண்டு பதவிகளுக்கும் பொதுவான அடிப்படையுடைய கேள்விகளையும் மற்றும் ஒவ்வொரு பதவிக்கும் பொருத்தமான கேள்விகளுக்கும் விடையளிக்கக்கூடிய வகையில் அமைந்திருக்கும். |
| 2 | பொது அறிவும் மதிநுட்பமும் | 1 மணித்தியாலம் | இரட்டை வடிவான கேள்விகளைக் கொண்டது. விண்ணப்பதாரி கொண்டுள்ள சமூக, பொருளாதார அரசியல் நிலைமை மற்றும் வரலாற்று விடயங்கள் தொடர்பான அறிவு மற்றும் அபேட்சகரிடம் காணப்படும் புரிந்து கொள்ளும் ஆற்றல், தர்க்க ரீதியாக சிந்திக்கும் ஆற்றல், விரைவாக முடிவெடுக்கும் ஆற்றல், மொழி, அட்டவணை, படம், வரைபு என்பவற்றைப் பயன்படுத்தவும் புரிந்துகொள்வதற்குமான ஆற்றல். |

8. **அரச மொழிக்கொள்கையை அமுல்படுத்துதல்**.- அரச நிர்வாக மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் (2007.04.28 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள அ. நி. சு. இல. 07/2007 இற்கு ஏற்ப) 2007.07.01 ஆந் திகதிக்குப் பின்னர் சேவையில் இணைந்துகொள்ளும் மொழிமூலத்திற்கு மேலதிகமான அடுத்த அரச கரும மொழி தொடர்பான புலமையை சேவையில் இணைத்து 5 வருடத்துக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

9. **சேவையில் அமர்த்தப்படும் நிபந்தனைகள் :**

9.1 இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்தைக் கொண்டது. விதவை, அனாதை/ தாரமிழந்தவர் அனாதை ஓய்வூதிய நிதியத்துக்கு சந்தா செலுத்த வேண்டும்.

9.2 தெரிவுசெய்யப்படும் அபேட்சகர் தாபன விதிக்கோவை, அரச நிதிப்பிரமாணங்கள், அரச விடய அமைச்சு மற்றும் அரசாங்கத் தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும் சட்டவிதிகளுக்குக் கட்டுப்பட்டு செயற்பட வேண்டும்.

9.3 தாபன விதிக்கோவையின் II ஆம் பகுதியின் 10 முதல் 12 வரையான விதிகளும் ஏற்புடையதாகும்.

9.4 இந்தப் பதவி மூன்று வருட நன்னடத்தை கண்காணிப்புக் காலத்துக்குட்பட்டது.

10. அரச மற்றும் மாகாண அரச சேவைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.

பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல,
அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்.

அரசாங்க தகவல் திணைக்களம்,
கொழும்பு 05,
28.04.2011.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க தகவல் திணைக்களத்தின் தொழிநுட்ப உதவியாளர் மற்றும் புகைப்படப்பிடிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்**

(அலுவலக உபயோகத்திற்கு)

விண்ணப்பிக்கும் பதவி :

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம்-1, தமிழ்-2, ஆங்கிலம்-3
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

1. (i) முதலெழுத்துக்களுடன் இறுதியில் வரும் பெயர் :----.
(ii) முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர் :----.
(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :----.

2. விலாசமும் தொலைபேசி இலக்கமும் :
(i) அலுவலக விலாசம் :----.
தொலைபேசி இலக்கம் :----.
(ii) தனிப்பட்ட விலாசம் :----.
(iii) தொலைபேசி இலக்கம் :----.
(விலாசம் அல்லது தொலைபேசி இலக்கத்தில் மாற்றம் ஏற்படின் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.)

3. பிறந்த திகதியும் இடமும் :----.

4. விண்ணப்ப முடிவுத் திகதி :----.
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

5. தேசிய அடையாள அட்டை இல. :----.

6. நீர் இலங்கைப் பிரசையா ? :----.

7. (i) பால் (ஆண்/பெண்) :----.
(ii) திருமணமானவர்/திருமணமாகாதவர்/விதவை :----.

8. கல்வித் தகைமை :

| பரீட்சை/ டிப்ளோமா | வருடம் | தோற்றிய பாடங்கள் | சித்தி | நிறுவனத்தின்/ பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

9. தொழிற்துறைத் தகைமை :

| பரீட்சை/ டிப்ளோமா | வருடம் | தோற்றிய பாடங்கள் | சித்தி | நிறுவனத்தின்/ பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. ஏனைய தகைமைகள் :----.

11. மக்கட் பிரிவு

சிங்களம் - 1
இலங்கைத் தமிழர் - 2
சோனகர் - 3
இந்திய வம்சாவளி - 4
வேறு - 5

(பெட்டியினுள் உரிய இலக்கத்தைக் குறிப்பிடவும்.)

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை, சரியானவை என இத்தால் உறுதிப் படுத்துகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல் எதுவும் பிழையானது என நான் தெரிவுசெய்யப்பட முன்னர் தெரியவருமிடத்து தகைமையற்றவன் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாகத் தெரியவந்தால் நான் எந்தவித நஷ்டஈடும் வழங்காது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

(இப்பகுதியானது ஏற்கனவே அரச தொழிலில் உள்ளவர் அல்லது பயிற்றப்படுபவருக்கு மட்டுமே)

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் அத்தாட்சி**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் தொழில்நுட்ப உதவியாளர்/உதவி புகைப்படப் பிடிப்பாளர் பதவிக்காக விண்ணப்பித்துள்ள ----------- அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் ----------- பதவியில் பணிபுரியும்/பயிலுனராகவிருக்கும் திரு./திருமதி/செல்வி ---------- இனது சேவை மற்றும் நடத்தை திருப்தியளிக்கக்கூடியதாக உள்ளதாகவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். அவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுமிடத்து சேவையிலிருந்து விடுவிக்கலாம்/விடுவிக்க முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

-------------
உத்தியோகபூர்வ முத்திரை.

5-345

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை,
இந்துசமயம் – 2010 (2011)

**பரீட்சை நிபந்தனைகளும் பாடத்திட்டமும்.**- மேற்படி பரீட்சை 2011 ஆம் ஆண்டு ஒகத்து மாதத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களினால் இலங்கை முழுவதும் நடாத்தப்படும்.

2. **பரீட்சை நடைபெறும் நிலையங்கள்.**- விண்ணப்பதாரிகளின் தொகைக்கேற்ப நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும்.

எனினும், குறிப்பிட்ட தொகையான விண்ணப்பதாரிகள் ஒரு பரீட்சை நிலையத்திற்கு விண்ணப்பிக்காத பட்சத்தில், அப்பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு, அருகிலுள்ள வேறொரு பரீட்சை நிலையத்தில் தோற்றுமாறு விண்ணப்பதாரிகள் கோரப்படுவர். நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பரீட்சை நிலையங்கள் நிறுவப்பட உத்தேசிக்கப் பட்டுள்ள நகரங்கள் தொடர்பான விபரங்கள் இவ்வறிவித்தலின் இறுதியிலே சேர்க்கப்பட்டுள்ள இணைப்பு I இல் காட்டப்பட்டுள்ளன.

3. **மொழிமூலமும் பாடத்திட்டமும்** :

3.1 இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் பின்னிணைப்பு 02 இல் காட்டப்பட்டுள்ளது.
3.2 இப்பரீட்சை தமிழ் மொழியில் மாத்திரம் நடாத்தப்படும்.

4. **தகைமை.**- இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் விண்ணப்பதாரி கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் :-

4.1 இப்பரீட்சை இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட இந்து அறநெறிப் பாடசாலைகளிற் பயிலும் மேற்பிரிவு மாணவர்களுக்கானது. மேற்பிரிவில் பத்தாம் ஆண்டில் சித்திபெற்று, பதினோராம் ஆண்டில் கல்வியை மேற்கொள்பவர்களும் ஏற்கனவே இப்பரீட்சையில் தோற்றி சித்தியடையாதவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

**குறிப்பு.**- (அ) இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள விண்ணப்பதாரி மேற்குறித்த தகைமையைப் பெற்றுள்ளார் என்பதனை இந்து அறநெறிப்

பாடசாலையின் அதிபர் அல்லது பொறுப்பாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ஆ) பதிவுசெய்யப்பட்ட அறநெறிப் பாடசாலையொன்றின் ஊடாக மட்டுமே இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

5. கடந்த ஆண்டில் மாணவர்களை பரீட்சைக்கு அனுப்பிவைத்த எல்லா இந்து அறநெறிப் பாடசாலைகளுக்கும் போதுமான விண்ணப்பப்படிவங்களும் அறிவுறுத்தல்களும் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பப்படிவம் கிடைக்காத, அல்லது 2009 (2010) ஆம் ஆண்டுப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகளை அனுப்பாத இந்து அறநெறிப் பாடசாலை ஆயின் பாடசாலையின் பெயர், முகவரி, தோற்றவுள்ள விண்ணப்பதாரிகளின் தொகை போன்ற விபரங்களைக் குறிப்பிட்டு 5.3 பிரிவிற் குறிப்பிட்ட முகவரிக்கு 2011.06.03 ஆந் திகதிக்கு முன்னர் அறிவிக்க வேண்டும் :

5.1 விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2011.06.10 ஆந் திகதி ஆகும்.

5.2 விண்ணப்பப்படிவங்கள், தெளிவாகவும் பிழையின்றியும் நிரப்பப்படல் வேண்டும். அங்ஙனம் நிரப்பப்படாத விண்ணப்பங்களும், இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

5.3 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் :-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
தேசிய மதிப்பீட்டிற்கும், பரீட்சித்தலுக்குமான சேவை,
பெலவத்தை, பத்தரமுல்லை.

விண்ணப்பங்கள் கிடைத்தமை தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது.

5.4 விண்ணப்பங்களை இணைத்து அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை, இந்து சமயம் - 2010'' எனவும் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கும் நகரமும் குறிப்பிடப்படல் வேண்டும்.

5.5 விண்ணப்பங்களோடு எவ்வித சான்றிதழ்களையும் இணைத்து அனுப்பக் கூடாது. இந்து அறநெறிப் பாடசாலையின் அதிபர் அல்லது பொறுப்பாளர், விண்ணப்பதாரி குறித்த தகைமையைப் பெற்றுள்ளாரென்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

6. **பரீட்சைக் கட்டணம்.**- முதற்தடவையாகத் தோற்றுபவர்கள், பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. ஏனையோருக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 150 ஆகும். நூன சித்தி பாடமொன்றிற்கு ரூபா 50 ஆகும் :

6.1 பரீட்சைக் கட்டணம் செலுத்தவேண்டிய விண்ணப்பதாரிகள் (தமது அறநெறிப் பாடசாலை முதல்வரூடாக) நாட்டின் எந்தவொரு தபால் நிலையத்திலும் உரிய பணத்தைச் செலுத்தி, பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தின் மறுபுறத்தில் ஒட்டி அனுப்பவேண்டும். (முத்திரை/காசுக் கட்டளை மூலமாக பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்த முடியாது.) பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன் கீழ் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

6.2 அறநெறிப் பாடசாலை முதல்வர்கள் உரிய பரீட்சார்த்திகளிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பரீட்சைக் கட்டணத்தை மொத்தமாக அருகாமையிலுள்ள தபாலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் மறுபுறத்தில் ஒட்டி அனுப்புதல் வேண்டும்.

6.3 எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைக்குச் செலுத்தப்பட்ட கட்டணம், வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ, மீளப்பெறவோ இயலாததாகும்.

7. பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் உரிய அறநெறிப் பாடசாலை அதிபர்கள்/பொறுப்பாளர்கள் மூலமாக விநியோகிக்கப்படும்.

7.1 சகல விண்ணப்பதாரிகளும் தாம் முதலாவதாகப் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்திலேயே தமது கையொப்பம் சான்றுறுதி செய்யப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்க வேண்டும். விண்ணப்பதாரி ஒருவர் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத போதோ அல்லது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்ட பரீட்சை நிலையம் தவிர்ந்த வேறொரு நிலையத்தில் தோற்றும்போதே அவரது பரீட்சார்த்தித் தகவு இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பம், இந்து அறநெறிப் பாடசாலை அதிபர் மூலம் குறித்த விண்ணப்பதாரிகளுடையது என உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு ஏழு தினங்களுக்கு முன் அனுமதி அட்டைகள் கிடைக்காதவிடத்து விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த இந்து அறநெறிப் பாடசாலையின் அதிபர், இவ்விடயத்தைப் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கீழ்வரும் விடயங்கள் தெரிவிக்கப்படல் வேண்டும் :

1. பரீட்சையின் பெயர் ;
2. அறநெறிப் பாடசாலையின் பெயர் ;
3. விண்ணப்பதாரியின் முழுப்பெயரும் விலாசமும் ;
4. விண்ணப்பித்த பரீட்சை நிலையம்/நகரம் ;
5. விண்ணப்பங்களைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்த தபால் நிலையம் ;
6. பதிவு இலக்கமும், திகதியும்.

8. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்.**- இந்து அறநெறிப் பாடசாலை ஒன்றின் மூலம் தோற்றும் மாணவர்கள், பரீட்சை நிலையத்தில் ஒவ்வொரு பாடத்திற்குத் தோற்றும் சந்தர்ப்பத்திலும், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறு தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்குத் தயாராகச் சமுகமளித்தல் வேண்டும். இதற்கு கீழ்வரும் ஆவணங்களுள் ஒன்று ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும்.

8.1 ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை

8.2 செல்லுபடியாகும் பிரயாணக் கடவுச்சீட்டு (Passport)

9. **சித்திபெற்றமையை தீர்மானித்தலும், பரீட்சை முடிவுகளை வெளியிடலும்.**- இப்பரீட்சைக்குரிய பாடங்கள் 4 ஆகும். குறித்த நான்கு பாடங்களிலும் சித்திபெறும் பரீட்சார்த்திகள் மட்டும் இப்பரீட்சையில் சித்திபெற்றோராகக் கருதப்படுவர்.

ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்திபெற்று ஒரு பாடத்தில் மற்றும் சித்திபெறத் தவறுவோர் நூன சித்தி பெற்றோராகக் கருதப்படுவர். அவர்கள் அடுத்து வரும் மூன்று வருடங்களுக்குள் நூன சித்திப் பாடத்திற்குத் தோற்றி சித்திபெற்றால், பரீட்சையில் சித்திபெற்றோராகக் கணிக்கப்படுவர். (இது 2007 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும்.)

9.1 *பரீட்சை முடிவுகளை வெளியிடல்.*- விண்ணப்பதாரிகளின் பரீட்சை முடிவுகள் பற்றிய விவரங்கள் இந்து அறநெறிப் பாடசாலை அதிபர்/பொறுப்பாளருக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

10. **சான்றிதழ்**.- இப்பரீட்சையிற் சித்திபெறும் அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் சான்றிதழ்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

11. **பரிசு**.- இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுள் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்திபெறுவோருக்கு பரிசுகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.

12. **விடைத்தாள்களை மீள்பரிசீலனை செய்தல்**.- பரீட்சை முடிவுகள் வெளியாகி 30 நாட்களுக்குள், இத்திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் படிவங்கள் மூலம் இந்து அறநெறிப் பாடசாலை அதிபர்/பொறுப்பாளர் கோரியிருப்பின், விடைத்தாள்கள் மீள் பார்வையிடுவதற்குரிய வாய்ப்பு வழங்கப்படும். இதற்குரிய கட்டணத் தொகை அவ்வப்போது மாற்றம் பெறுவதால், குறித்த தொகை உரிய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். இக்கட்டணம், பரீட்சை பெறுபேறுகளில் மீள் பரிசீலனையின்போது திருத்தம் இருப்பின் மட்டும் மீளச் செலுத்தப்படும். எக்காரணங்கொண்டும் விண்ணப்பதாரிக்கோ அல்லது அவரது பிரதிநிதிகளுக்கோ விடைத்தாள்களைப் பார்ப்பதற்கான அனுமதி வழங்கப்படமாட்டாது.

13. இங்கு குறிப்பிடப்படும் அனைத்து நிபந்தனைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் அமைய நடந்துகொள்வதற்கு எல்லா விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டுள்ள அதேவேளை, இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபுக்கேற்பத் தீர்மானிக்கப்படும்.

அநுர எதிரிசிங்ஹ,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளை,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2011, ஏப்பிறல் ...........

*இணைப்பு 1*

குறித்த மாவட்டங்களிலே பரீட்சை மண்டபங்கள் ஏற்படுத்தப்படவுள்ள நகரங்களும் நகர இலக்கங்களும் :

**கொழும்பு மாவட்டம் - 01**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மருதானை | 0101 |
| கொட்டாஞ்சேனை | 0102 |
| பம்பலப்பிட்டி | 0103 |
| நுகேகொடை | 0104 |
| அவிசாவளை | 0105 |
| ஹோமாகம | 0106 |

**கம்பஹா மாவட்டம் - 02**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கம்பஹா | 0201 |
| நீர்கொழும்பு | 0202 |
| வத்தளை | 0203 |

**களுத்துறை மாவட்டம் - 03**

| நகரம் | நகர எண் |
|---|---|
| களுத்துறை | 0301 |
| மத்துகம | 0302 |
| பாணந்துறை | 0303 |
| அமுத்கம | 0304 |

**காலி மாவட்டம் - 04**

| நகரம் | நகர எண் |
|---|---|
| காலி | 0401 |

**மாத்தறை மாவட்டம் - 05**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மாத்தறை | 0501 |
| தெனியாய | 0502 |

**ஹம்பந்தோட்டை மாவட்டம் - 06**

| நகரம் | நகர எண் |
|---|---|
| ஹம்பாந்தோட்டை | 0601 |

**இரத்தினபுரி மாவட்டம் - 07**

| நகரம் | நகர எண் |
|---|---|
| இரத்தினபுரி | 0701 |
| கஹவத்தை | 0702 |
| பலாங்கொடை | 0703 |
| இறக்குவானை | 0704 |

**கேகாலை மாவட்டம் - 08**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கேகாலை | 0801 |
| யட்டியந்தோட்டை | 0802 |
| வரக்காப்பொல | 0803 |

**குருநாகல் மாவட்டம் - 09**

| நகரம் | நகர எண் |
|---|---|
| குருநாகல் | 0901 |

**புத்தளம் மாவட்டம் - 10**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| புத்தளம் | 1001 |
| சிலாபம் | 1002 |
| உடப்பு | 1003 |

**அநுராதபுரம் மாவட்டம் - 11**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| அநுராதபுரம் | 1101 |

**பொலன்னறுவை மாவட்டம் - 12**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| பொலன்னறுவை | 1201 |
| மனம்பிட்டிய | 1202 |

**மாத்தளை மாவட்டம் - 13**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மாத்தளை | 1301 |
| இரத்தோட்டை | 1302 |

**கண்டி மாவட்டம் - 14**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| கண்டி | 1401 |
| புசல்லாவ | 1402 |
| கலஹா | 1403 |
| கம்பளை | 1404 |
| நாவலப்பிட்டி | 1405 |

**நுவரெலியா மாவட்டம் - 15**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| நுவரெலியா | 1501 |
| ஹற்றன் | 1502 |
| பூண்டுலோயா | 1503 |
| தலவாக்கலை | 1504 |
| மஸ்கெலியா | 1505 |

**பதுளை மாவட்டம் - 16**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| பதுளை | 1601 |
| வெலிமடை | 1602 |
| பண்டாரவளை | 1603 |
| ஹப்புத்தளை | 1604 |
| பசறை | 1605 |

**மொனராகலை மாவட்டம் - 17**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மொனராகலை | 1701 |

**அம்பாறை மாவட்டம் - 18**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| அம்பாறை | 1801 |
| அக்கரைப்பற்று | 1802 |
| கல்முனை | 1803 |
| திருக்கோவில் | 1804 |
| பொத்துவில் | 1805 |
| சம்மாந்துறை | 1806 |

**மட்டக்களப்பு மாவட்டம் - 19**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மட்டக்களப்பு | 1901 |
| களுவாஞ்சிக்குடி | 1902 |
| வாழைச்சேனை | 1903 |
| செங்கலடி | 1904 |

**திருகோணமலை மாவட்டம் - 20**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| திருகோணமலை | 2001 |
| மூதூர் | 2002 |

**வவுனியா மாவட்டம் - 21**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| வவுனியா | 2101 |
| ஓமந்தை | 2102 |
| செட்டிக்குளம் | 2103 |

**மன்னார் மாவட்டம் - 22**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| மன்னார் | 2201 |

**முல்லைத்தீவு மாவட்டம் - 23**

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| முல்லைத்தீவு | 2301 |
| புதுக்குடியிருப்பு | 2302 |
| ஒட்டுசுட்டான் | 2303 |

**கிளிநொச்சி மாவட்டம் - 24**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கிளிநொச்சி | 2401 |
| ஸ்கந்தபுரம் | 2402 |
| பூநகரி | 2403 |
| முழங்காவில் | 2404 |
| பளை | 2405 |

**யாழ்ப்பாண மாவட்டம் - 25**

| நகரம் | நகர எண் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 2501 |
| சாவகச்சேரி | 2502 |
| பருத்தித்துறை | 2503 |
| வேலணை | 2504 |
| நெடுந்தீவு | 2505 |

இணைப்பு 02

**அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை -
இந்து சமய பாடத்திட்டம்**

1. சமய வரலாறு
2. சமய மெய்யியல்
3. சமய இலக்கியம்
4. சமய வாழ்வியல்

**1. சமய வரலாறு**

1. இந்து சமயத்தின் பொதுவான வரலாற்று நோக்கு

1.1 சிந்துவெளி நாகரிகம்
1.2 சனாதன தர்மம்
1.3 வேதகாலம்

1.3.1 வேதகால தெய்வங்களும், வழி பாட்டு முறைகளும்

1.4 இதிகாசங்கள்

1.4.1 வகை
1.4.2 தோன்றக் காரணம்
1.4.3 பகவத் கீதை

1.5 புராணங்கள்

1.5.1 பதினென் புராணவகை – தோன்றக் காரணம்

1.6 தரும சாத்திரங்கள்

2. சைவசமய வரலாறு

2.1 சைவ சமயத்தின் தொன்மை
2.2 சிந்துவெளி நாகரிக காலச் சிவவழிபாடு
2.3 சிவாகமங்களின் தோற்றமும் வழிபாடும்

3. தமிழகத்துச் சைவசமய வரலாறு

3.1 சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும்
3.2 பக்திநெறி

3.2.1 காரைக்காலம்மையார்
3.2.2 சமய குரவர் நால்வர்
3.2.3 ஆலயங்களும், வழிபாடும்

3.3 சாத்திரங்களும் கோத்திரங்களும்

3.3.1 கோயில் கட்டிடங்களின் வளர்ச்சி
3.3.2 திருமுறை, திவ்வியபிரபந்தத் தொகுப்பு
3.3.3 சந்தான குரவர் நால்வர்
3.3.4 மெய்கண்ட சாத்திரங்கள்
3.3.5 பிற்காலத்து தோத்திரப் பாடல்கள்

3.4 சைவ நிறுவனங்கள் : மடங்களும் ஆதீனங்களும்
3.5 ஞானியர் வரலாறு :

திருமூலர்

4. இலங்கையில் சைவம்

4.1 தொன்மை
4.2 புராதன ஆலயங்கள்
(சிறப்பாக) திருக்கேதீச்சரம்
திருக்கோணேச்சரம்
முன்னேச்சரம்
நகுலேச்சரம்
கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்
4.3 பிரதேச ஆலய வரலாறு
(மாணவர் தாம் வாழும் பிரதேசத்தில் உள்ள ஆலயம் பற்றி அறிதல்)

5. இலங்கையில் சைவ மறுமலர்ச்சி

5.1 பெரியார்கள்
5.1.1 ஆறுமுகநாவலர்
5.1.2 விபுலானந்தர்
5.2 சைவம் வளர்த்த நிறுவனங்கள்
5.3 ஞானியர்

**2. சமய மெய்யியல்**

1. வேதங்கள்

1.1 பல தெய்வக் கோட்பாடு
1.2 ஒரு தெய்வக் கோட்பாடு
1.3 வேதப் பிரிவுகள்

2. உபநிடதங்கள்

2.1 மகாவாக்கியங்கள்
2.2 அறக்கோட்பாடு

3. பகவத்கீதை

3.1 நால்வகை யோகம்

4. மூவகை வேதாந்தங்கள்

4.1 அத்துவைதம்
4.2 விசிட்டாத்வைதம்
4.3 துவைதம்
(இவற்றை அறிமுகப்படுத்தினால் போதும்)

5. சைவ சித்தாந்தம்

5.1 மெய்கண்ட சாத்திரங்கள் (14) அறிமுகம்
5.2 சற்கரிய வாதம்
5.3 முப்பொருள் (பதி, பசு, பாசம்)
5.4 சைவநாற்பாதங்கள் (சரியை, கிரியை, யோகம், ஞானம்)
5.5 குரு, லிங்க, சங்கம வழிபாடு
5.6 சிவசின்னங்கள்
5.7 தீட்சை

6. திருவருட்பயன் - 10 அதிகாரம்

3. ***சமய இலக்கியம்***

1. திருமுறைப் பாடல்கள்
(மனனம், பொழிப்பு, சந்தர்ப்பம்)

1.1 திருஞானசம்பந்தர் தேவாரம்
(அ) "வேயுறு தோளி பங்கன்................"
(பதிகம் முழுவதும்)
1.2 அப்பர் தேவாரம்
(அ) "மாதர் பிறை கண்ணியானை ......."
(பதிகம் முழுவதும்)
1.3 சுந்தரர் தேவாரம்
(அ) திருக்கேதீச்சரத் திருப்பதிகம்
"நத்தார் படை ............................"
(பதிகம் முழுவதும்)
1.4 மாணிக்கவாசகர் - திருவாசகம்
(அ) திருவெம்பாவை (முழுவதும்)
(ஆ) சிவபுராணம்
1.5 திருவிசைப்பா
(அ) "அற்புதத் தெய்வம் ....................."
(ஆ) "கற்றவர் விழுங்கும் ....................."
1.6 திருப்பல்லாண்டு
(அ) "சீரும் திருவம் பொலிய ................."
(ஆ) "ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் ........."
(இ) "மிண்டு மனத்தவர் .................."
1.7 திருப்புராணம்
(அ) "ஐந்து பேரறிவும் ......................"
(ஆ) "தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உந்தன் .................."
(இ) "அண்ணலார் தமக்கீடு ..............."
1.8 திருமந்திரம்
(அ) "அன்பும் சிவமும் ......................"
(ஆ) "உள்ளம் பெருங்கோயில் ..........."
(இ) "யாவர்க்குமாம் ..........................."
1.9 இரண்டாம் திருமுறை
முத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை – கபிலதேவநாயனார்
"திருவாக்குஞ் செய்கருமஞ் கைகூட்டும் செங்சொற் ....................."
காரைக்காலம்மையார் அருளிச் செய்த அற்புதத் திருவந்தாதி
"கண்ணாரைக் கண்டும் என் கையாரக் கூப்பியும் ...................."

2. ஏனைய தோத்திரப் பாடல்கள்
2.1 திருப்புகழ் - அருணகிரிநாதர்
(அ) "எதிரிலாத பக்தி ......................."
(ஆ) "பக்தியால் யாலுனை ..............."
2.2 அபிராமி அந்தாதி – அபிராமிப்பட்டர்
(அ) "நின்றும் இருந்தும் கிடந்தும் ......."
(ஆ) "சித்தியும் சித்தி தரும் தெய்வமுமாகி ..................."
(இ) "கண் களிக்கும்படி கண்டு கொண்டேன் ..............."
2.3 பராபரக்கண்ணி – தாயுமானவர்
(அ) "கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க ............."
(ஆ) "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கு"
(இ) "விரும்பு சரியை முதல் மெய்ஞானம் நான்கும் ............"
(ஈ) "சினம் இறக்கக் கற்றாலும் சித்தி எல்லாம் பெற்றாலும் ............"
(உ) "எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே ................."

3. திவ்விய பிரபந்தங்கள்
திருப்பாவை :– ஆண்டாள்

(அ) "மாரிமழை முழைஞ்சல் முன்னிக் கிடத்துறங்கும்............"
(ஆ) அன்றிவ்வுலக மறந்தாயடி போற்றி ......"
(இ) "மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான் ............"

4. கந்தபுராணம்
கந்தவிரதப் பாடல்கள் - 20
(தெரிவுசெய்யப்பட்டவை) – பாடல் ஒன்று முதல் இருபது வரை

5. பெரிய புராணம்
கண்ணப்பநாயனார் புராணம் - பாடல் 815 முதல் 835 வரை

6. திருவிளையாடற் புராணம் - பரம்சோதி முனிவர்
(அ) கால்மாறியாடின படலம் - 1475 பாடல் முதல் 1489 பாடல் வரை

7. நீதிப்பாடல்கள்
திருக்குறள் - திருவள்ளுவர்

(அ) அறன்வலியுறுத்தல் - 4 ஆம் அதிகாரம்
(ஆ) இல் வாழ்க்கை – 5 ஆம் அதிகாரம்
(இ) அடக்கமுடைமை – 13 ஆம் அதிகாரம்
(ஈ) ஒழுக்கமுடைமை – 14 ஆம் அதிகாரம்
(உ) நட்பு 79 ஆம் அதிகாரம்

4. ***சமய வாழ்வியல்***

1. ஆலய வழிபாடும் இறை நம்பிக்கையும்

1.1 திருக்கோயில் அமைப்பு
1.2 திருக்கோயில் வழிபாடு
1.3 நித்திய, நைமித்திய கிரியைகள்
1.4 இறை நம்பிக்கை (பக்தி அனுபவங்கள்)

2. வீட்டில் வழிபாடு

2.1 நித்திய வழிபாடு (காலை, மாலை வழிபாடு)

2.2 விசேட வழிபாடு

(அ) கூட்டு வழிபாடு
(ஆ) தியானம்
(இ) செபம்

2.3 அகப்புறத் தூய்மை

3. விரதங்களும் பண்டிகைகளும்
3.1 விரதங்கள்

(அ) சிவராத்திரி
நவராத்திரி
விநாயகர் சதுர்த்தி
கந்தசஷ்டி
விநாயகர் சஷ்டி
திருவாதிரை
பிரதோஷம்
வைகுண்ட ஏகாதசி

(ஆ) அமாவாசை, பூரணை விரதங்கள்

3.2 பண்டிகைகள்

3.2.1 தைப்பொங்கல்
3.2.2 சித்திரை வருடப் பிறப்பு
3.2.3 ஆடிப்பிறப்பு
3.2.4 தீபாவளி
3.2.5 கார்த்திகை விளக்கு

4. அபரக் கிரியைகள்

4.1 பொது விளக்கீடு
4.2 மரணக் கிரியைகள்
4.3 சபிண்டீகரணம்
4.4 சிரார்த்தம்

5. சமய, ஆன்மீக விழுமியங்கள்

5.1 பெற்றோர், மூத்தோர், பெரியோர், குரு ஆகியோரைக் கனம் பண்ணல்
5.2 நற்குடி மக்களாக வாழ்வதற்கு உதவும் நெறிமுறைப் பண்புகளை வாழ்வில் கடைப்பிடித்தல்
5.3 அன்பு, உண்மை, கருணை, இன்னா செய்யாமை, பிறர் நலம் பேணல், கூடிவாழும் பண்பு, நீதி, கடமையுணர்வு முதலிய மனித விழுமியங்களைப் பேணல், இவற்றை அறிந்து கொள்ளல்.

6. சமய வாழ்வுடன் கலைகள்-

இசை
நடனம்
கட்டடம்
சாத்துப்படி
மாலை கட்டுதல்
பண்ணிசை
சிற்பம்
ஓவியம்
சுவாமிக்கு அலங்காரம் செய்தல்
கோலம் போடுதல்

5-326

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.